DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : CC **176/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : திரு.மாரியப்பன் என்ற பாக்கியராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 17.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 17th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 ஐ தெரியாது. ஆனால் அ.சா.1 ன் தந்தையை எனக்கு தெரியும். நான் 2015 ம் ஆண்டிலிருந்து தற்போது வரை நாட்டாண்மையாக இருந்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தெலுங்கு செட்டியார் சமுதாயத்திற்கு நாட்டாண்மையாக இருந்தேன். எங்கள் சமுதாயத்தில் நாட்டாண்மை முன்னிலையில் பெண் கேட்கும் வழக்கம் உண்டா என்றால் இல்லை. 30.06.2002ம் தேதி கழுகுமலை கழுகாசல மூர்த்தி கோவிலில் வைத்து ராஜமோகன் என்பவருக்கும் பத்மாவதி என்பவருக்கும் திருமணம் நடைபெற்றதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமணத்தின் போது வரதட்சணையாக 12 பவுன் நகையும் 25,000/-ம் ரொக்கமும் சீர் சீராட்டுகளும் கொடுத்தார்கள் என்றும், நான்தான் வரதட்சரைணயை வாங்கி மாப்பிளை வீட்டாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. பத்மாவதியின் கணவர் குடித்துவிட்டு வந்து 12 பவுன் நகையை ஊதாரித்தனமாக செலவு செய்ததாக எங்கள் சமுதாயத்திடம் பத்மாவதி சொன்னார் என்றால் சரியல்ல. ராஜமோகனுக்கு செங்கோட்டை சேர்ந்த மகேஸ்வரி என்பவருடன் ஏற்கனவே திருமணம் ஆகி ஒரு பெண் குழந்தை இருந்ததை மறைத்து பத்மாவதியை திருமணம் செய்து கொண்டதாக தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. 04.12.2015ம் தேதி பத்மாவதியின் மாமனார் மாமியாருக்கு வருட திதி கொடுப்பதற்காக எதிரிகள் வீட்டிற்கு வந்தபோது ரூ.1,00,000/- ம் வாங்கி வா இல்லை என்றால் வாழ முடியாது என்று சொல்லி துணி மணிகளை எடுத்து வெளியே வீசி துரத்திவிட்டதாகவும், பத்மாவதி வேறு வழியில்லாமல் சென்னைக்கு சென்றுவிட்டதாகவும் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பத்மாவதிக்கு போட்ட நகைகளையும் பணத்தையும் திரும்ப தராததால் புகார் கொடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**